நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# D.V.C. No. 2 /2017

## R.W.1 –ன் வாக்குமூலம்

**(எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரங்கசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | அழகேசன் |
| கிராமம் | : | வீரநாயக்கன்பட்டி |
| வட்டம் | : | அரூர் |
| மாவட்டம் | : | தருமபுரி |
| சாட்சி வரிசை எண் | : | **RW1** |
| வயது | : | – |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**மனுதாரர் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.26PM

1. நான் தற்போது அரூரில் குடியிருந்து எனது அப்பாவுக்கு துணையாக விவசாயம் செய்து வருகிறேன். மனுதாரர் மதுவந்தி எனது மனைவி ஆவார். இரண்டாவது மனுதாரர் ஜஸ்வின் எனது மகன் ஆவார். எனது மனைவி குடும்ப வன்முறை சட்டத்தில் எனக்கு எதிராக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில் எனது

தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு எழுத்துபூர்வமான பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி தாக்கல் செய்த HMOP.No. 122/2016 என்ற மனுவின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். **(அது எ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த மனுவின் பேரில் மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையில் எனக்கு கொடுக்கப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **(அந்த எதிருரையின் நகல் எ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் எனது உடல்நிலை பாதிப்புக்கான சிகிச்சை எடுத்து கொண்டதற்கான மருத்துவ கட்டண ரசீதை நகல் தாக்கல் செய்கிறேன். **(அது எ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.37PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**